அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல: 374

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு- 07.

1987, ஏப்ரல் 12 ஆம் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

அரசாங்க நிருவாக அமைச்சின் கீழான இணைந்த சேவைகளைச் சேர்ந்த எழுதுநர்கள், சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத்தாளர்கள், கட்டுநர்கள்

---

அரசியலமைப்பின் 114 ஆம் உறுப்புரை நீதித்துறை அலுவலர்கள், அட்டவணைப் படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்கள் ஆகியோரின் நியமனம், இடமாற்றம், பதவி நீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு ஆகியவற்றை நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவிடம் பாரித்துள்ளது.

02. அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர் என்பது ஐந்தாவது அட்டவணையில், விசேடித்துச் சுட்டிய வகுதியுளமைந்த மேல் நீதிமன்றப் பதிவகத்தில், மேன் முறையீட்டு மன்றில் அல்லது ஏதாவது முதனிலை நீதி மன்றில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள பகிரங்க அலுவலர் எவரையும் அடக்கும்.

03. ஐந்தாவது அட்டவணை ஏனையவற்றுடன் எழுதுநர், சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர், கட்டுநர் ஆகியோரையும் குறிக்கும்.

04. அரசியலமைப்பு செயல்வலுப் பெற்ற பின்பு சேவைகளில் தொடர்ந்து இருக்க இசைவு கொண்ட பொது எழுதுநர் சேவையைச் சேர்ந்த எழுதுநர்கள், அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவையைச் சேர்ந்த சுருக்கெழுத்தாளர்கள், அரசாங்க தட்டெழுத்தாளர் சேவையைச் சேர்ந்த தட்டெழுத்தாளர்கள், அலுவலகப் பணியாளர் சேவையைச் சேர்ந்த கட்டுநர்கள் ஆகியோர் விடயத்தில். நியமனம், இடமாற்றம், பதவிநீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு ஆகியவை பதவிநிலைத் தரம் சாரார்தோர் தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளரிடத்தும் பதவி நிலைத் தரம் சார்ந்தோர் தொடர்பில் அரசாங்க நிருவாக அமைச்சுச் செயலாளரிடத்தும் பாரிக்கப்பட்டுள்ளன.

ஒப்பம்: டி.பீ.ஐ.பி.எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.

ந02/*